**10.03.2026**

**O.S.No.295/2018**

**வா.சா.1 : மணிமேகலை**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் 7 வது வரை படித்துள்ளேன். ஜெயராஜ் எனது அண்ணன் என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி அமுதா எனது அக்கா. 1980 க்கு முன்பே எனக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். 1983-ல் எனது சகோதரி சாந்திக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எங்களுக்கு திருமணம் ஆன பின்னிட்டு நாங்கள் அவரவர் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை எனது அண்ணன் ஜெயராஜ் தான் பார்த்து கொள்கிறார் என்றால் சரிதான். அவருடைய அனுபவத்தில் தான் தாவா சொத்து இருந்து வருகிறது. 2008 ம் ஆண்டு எனது அம்மா சரஸ்வதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் வயதாகி தான் இறந்தார். எனது தாயார் இறக்கும் வரை எனது அண்ணன் ஜெயராஜ் தான் பார்த்து கொண்டார் என்றால் சரிதான்.

2) மேற்படி தாவா சொத்து ரூ.40 லட்சம் போகும் என்றால் சரிதான். எவ்வளவு போகும் என்று தெரியாது என்று சாட்சி சொல்கிறார். தாவா சொத்து மொத்தம் 8 ஏக்கர் நிலம் என்றால் சரிதான். அதனுடன் 2000 ச.அடி வீடும் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் ரெட்டியார் சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி ரெட்டியார் சமூகத்தை சார்ந்தவர்கள் நிலத்துடன் நல்ல வசதியாக இருப்பார்கள் என்றால் சரிதான். எனது அப்பாதான் எனக்கும் சாந்திக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அப்போது நகை மற்றும் சீர்வரிசை அனைத்தையும் எனது அப்பா தான் செய்தார் என்றால் சரிதான். எங்களுக்கு திருமணம் செய்து வைக்கும் போது எனது அப்பா ஆளுக்கு 50 பவுன் போட்டார் என்றால் சரியல்ல. ஆளுக்கு 5 பவுன் தான் போட்டார். தாவா சொத்து ரூ.11 லட்சம் போகும் என்று சொல்லி உள்ளேன்.

3) எதன் அடிப்படையில் போகும் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா எங்களுக்கு திருமணம் ஆகும் போது எங்களுக்கு தேவையான

சீர்வரிசை மற்றும் நகை  செய்துவிட்டார் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக நகை போடவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்துக்கான மதிப்பு ஆவணங்களை தாக்கல் செய்திருந்தார் அந்த வழக்கு சொத்துக்களின் மதிப்பு மிகையாக இருந்திருக்கும் என்றும் மேலும் இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இருந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல.

4) என் அப்பா இருக்கும்போதோ எனது அம்மா இருக்கும்போதோ இந்த சொத்தில் பாகப்பிரிவினை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் எனது அப்பா இருக்கும்போதே நகை மற்றும் சீர்வரிசை அனைத்தையும் வாங்கி கொண்டு நிலத்தின் மேல் உள்ள உரிமையை விட்டு கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பெற்றோருக்கு மரியாதை கொடுத்ததால் தான் அப்போது பாகப்பிரிவினை கோரவில்லை. இந்த வழக்கிற்காக சரியான மதிப்பீடு செய்து உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்தில் எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.10 16:40:57 +0530

**Subordinate Judge, Attur.**